தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

11.12.2012 P.M

12.12.2012 A.M

## மேட்டூரிலிருந்து தண்ணீர் திறப்பு அதிகரிப்பு



மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்குத் திறக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 11,500 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

காவிரி டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், டெல்டா பாசனப் பகுதிகளில் தண்ணீர் தேவை அதிகரித்துள்ளதால், திங்கள்கிழமை நள்ளிரவு முதல் தண்ணீர் திறப்பு வினாடிக்கு 11,500 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 48.82 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 17,313 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நீர் இருப்பு 17.07 டிஎம்சியாக உள்ளது.

## 8 மாவட்டங்களில் தேக்கு மரங்கள் வளர்க்கும் திட்டம் : ஜெயலலிதா



தமிழகத்தில் எட்டு மாவட்டங்களில் தேக்கு மரங்கள் வளர்க்கும் திட்டத்தைச் செயல்படுத்த முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதற்காக, ரூ.6 கோடி நிதியை அவர் ஒதுக்கியுள்ளார்.

இதுகுறித்து, தமிழக அரசு செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

தமிழகத்தின் இயற்கை வளங்களை மேம்படுத்துவதற்கும், சுற்றுச்சூழலை பேணிப் பாதுகாக்கவும், பசுமைப் போர்வையை அதிகரிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

2001-2006 ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட தேக்கு மரத் தோட்டங்கள் ஏற்படுத்தும் திட்டத்தை மேலும் செம்மைப்படுத்தும் வகையில், ரூ.39.50 கோடி செலவில் 19 ஆயிரத்து 75 ஹெக்டேர் பரப்பில் தேக்கு மரங்கள் நடவு செய்யப்படும் என்றும், ஏற்கெனவே பயிரிடப்பட்டுள்ள தேக்கு மரங்களை பராமரிப்பதற்கு நிதி ஒதுக்கப்படும் என்றும் முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருந்தார்.

இதன்படி, முதல் கட்டமாக, ரூ.6 கோடியே 8 லட்சம் செலவில், கடலூர், கரூர், திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், பெரம்பலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 6 ஆயிரத்து 475 ஹெக்டேர் பரப்பில் தேக்கு மரங்கள் வளர்க்கும் திட்டத்தை நடப்பாண்டில் செயல்படுத்த முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

மேலும், ஏற்கெனவே பயிரிடப்பட்டுள்ள தேக்கு மரத் தோட்டங்களை பராமரிப்பதற்கென ரூ.2.97 கோடியினை விடுவித்தும் முதல்வர் ஆணையிட்டுள்ளார்.

## வேளாண் துறை முக்கியத்துவத்தை குறைப்பது நியாயமற்றது : பிரணாப் முகர்ஜி பேச்சு




வேளாண்துறைக்கான முக்கியத்துவத்தை குறைப்பது நியாயமற்ற நடவடிக்கை என்று குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.

தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்திய தொழிலகக் கூட்டமைப்பு (சிஐஐ) சார்பில் "இந்திய வேளாண்துறையில் அரசு - தனியார் பங்களிப்புடன் இரண்டாவது பசுமைப் புரட்சி' என்ற தலைப்பில் மாநாடு நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பிரணாப் முகர்ஜி பேசியது:

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) வேளாண்துறையின் பங்களிப்பு குறைந்து வருகிறது. வேளாண் துறைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் குறைந்து வருவதுதான் இதற்குக் காரணம். இது ஏற்றுக் கொள்ள முடியாதது, நியாயமற்றது.

வேளாண் துறை எந்த அளவுக்கு வேகமாக வளர்கிறதோ, அந்த அளவில் வறுமை ஒழிப்பு, உள்ளார்ந்த வளர்ச்சி, உணவுப் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, கிராமப்புற பொருளாதார மேம்பாடு உள்ளிட்ட துறைகளும் முன்னேற்றமடையும். இன்று சேவைத் துறை, தொழில் துறையின் பங்களிப்பை விடவும், வேளாண் துறையின் பங்களிப்பு ஜிடிபி-யில் குறைவாக உள்ளது.

9ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஜிடிபி-யில் வேளாண்துறையின் பங்களிப்பு 23.4 சதவீதமாக இருந்தது. 11ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் (2007-2012) 15.2 சதவீதமாகக் குறைந்துவிட்டது. கடந்த 15 ஆண்டுகளில் நாட்டில் காலநிலையில் ஏற்பட்டும் வரும் எதிர்பாராத மாற்றங்கள், தண்ணீர் பற்றாக்குறை போன்ற காரணிகளும் வேளாண்மை உற்பத்தியைக் குறைத்துவிடுகிறது. எனினும் இதுபோன்ற இயற்கை இடர்பாடுகள் விவசாயத்தை பாதிக்காத வகையில் முடிந்த அளவுக்கு நாம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்த நிதியாண்டின் முதல் அரையாண்டில் வேளாண்மை உற்பத்தி விகிதம் 2.1 சதவீதமாக உள்ளது. இது விரும்பத்தக்க அளவு பெரிய வளர்ச்சியல்ல. ஆனால் இரண்டாவது அரையாண்டில் வளர்ச்சி இதைவிட அதிகமாக இருக்கும்.

இரண்டாவது பசுமைப் புரட்சி ஏற்பட வேண்டும். 12ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் (2012-17) 4 சதவீத வேளாண்மை வளர்ச்சி என்ற இலக்கை அடைய இப்போது முதலே முயற்சி மேற்கொள்ள வேண்டும். கலப்பின விதைகள், சிறந்த நீர் மேலாண்மை, உரங்கள், பூச்சி மருந்துகளை சரியான அளவில் பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிரணாப் பேசினார்.

11th dec 2012 P.M

**டெல்டா கடைமடை பகுதிகளில் நீரின்றி காய்ந்து வரும் நெற்பயிர் : விவசாயிகள் வேதனை**

கடலூர் மாவட்டத்தில் உள்ள காவிரி டெல்டா, கடைமடைப் பகுதிகளான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுக்காக்களில் பயிரிடப்பட்டுள்ள நிலங்களில் 50 சதவீத நிலங்களில் நீரின்றி நெற்பயிர்கள் காய்ந்து வருவதால் விவசாயிகள் மிகுந்த வேதனையில் உள்ளனர்.

÷கடலூர் மாவட்டம், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் ஆண்டுதோறும் வெள்ளம், வறட்சி, புயல் என மாறி, மாறி விவசாயம் பாதிக்கப்பட்டு விவசாயிகள் கடும்

நஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.
÷பலர் விவசாயத் தொழிலையே விட்டுவிட்டு வெளியேறும் நிலை உருவாகியுள்ளது.
இந்நிலையில் இந்த ஆண்டு போதிய மழை இல்லாததாலும், மேட்டூரிலிருந்து நீர் தாமதமாக திறக்கப்பட்டதாலும் விவசாயிகள் போதிய நீரின்றி சம்பா பயிர் சாகுபடியை தாமதமாக தொடங்கினர்.
÷தாமதமாக நீர் திறக்கப்பட்டதால் தமிழக அரசு நேரடி நெல் விதைப்பு சாகுபடி திட்டத்தை அறிவித்து, அதற்கு பல்வேறு மானியத் தொகையையும் அறிவித்தது.
÷இதை நம்பி விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு சாகுபடியில் ஈடுபட்டனர். தற்போது நிலம் புயலால் ஏற்பட்ட கனமழையில் நீரில் மூழ்கி மீண்டும் உயிர்பெற்ற பயிர்கள் தற்போது நீரின்றி காய்ந்து வருகின்றன.
÷இது குறித்து உழவர் கூட்டமைப்புத் தலைவர் பி.ரவீந்திரன் தெரிவித்தது: "இந்த இரண்டு தாலுக்காக்களிலும் 1 லட்சத்து 2916 ஏக்கரில் பாசனம் நடைபெற்று வருகிறது.
÷இதில் 30 சதவீதம் நெற்பயிர்கள் கதிர்வரும், அதாவது பால்கட்டும் தருவாயில் உள்ளது. 40 சதவீதம் நெற்பயிர்கள் 50-60 நாள் பயிர்களாக உள்ளது.
÷30 சதவீதம் நெற்பயிர்கள் நடவு நட்டு 20-30 நாள் பயிர்களாக உள்ளது. வடவாறு, வீராணம் ஏரி போன்ற பாசனத் தலைப்பு பகுதிகளில் உள்ள நிலங்களில் இன்றும் ஒருவாரத்துக்குதான் ஈரப்பசை இருக்கும்.
÷மற்ற பகுதிகளில் 3 முதல் 5 நாள்கள்தான் ஈரப்பசை இருக்கும். தற்போது 5 நாள்களுக்குள் நீர் கிடைத்தால் இந்த பயிர்கள் தப்பிக்க வாய்ப்புள்ளன.
÷ஆனால் தற்போது 5 நாள்களுக்குள் நீர் கிடைக்க வாய்ப்பு இல்லாததால் நெற்பயிர்கள் அனைத்தும் நிச்சயம் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.
÷தற்போது கடை, மடைப் பகுதிகளில் சிதம்பரம் அருகே மணலூர், பாலூத்தங்கரை, கீழமூங்கிலடி, மேலமூங்கிலடி, தையாக்குப்பம், காட்டுமன்னார்கோவில் அருகே நந்திமங்கலம், அத்திப்பட்டு, நளம்புத்தூர் உள்ளிட்ட கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர்களில் நெற்பயிர்கள் நீரின்றி கருகியுள்ளன.
÷தற்போது தமிழக முதல்வர் பயிர் காப்பீடுத் திட்டத்தின் கீழ் அனைத்து விவசாயிகளின் பிரீமியம் தொகையை அரசே செலுத்தி ஏக்கருக்கு ரூ.8962-ம், மாநில அரசின் நிதி ரூ.5 ஆயிரம் சேர்த்து நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை வரவேற்கிறோம்.
÷அதே நேரத்தில் கடலூர் மாவட்டத்தை பொறுத்தவரை திருத்தியமைக்கப்பட்ட புதிய காப்பீடுத் திட்டத்தை கிராம அளவில் கணக்கிட்டு செயல்படுத்தினால் கூடுதலான இழப்பீடு தொகை கிடைக்கும்.
÷எனவே திருத்தியமைக்கப்பட்ட புதிய காப்பீடு திட்டத்தை அரசு செயல்படுத்த வேண்டும்' என்கிறார் பி.ரவீந்திரன்.

## விவசாய பயிற்சி முகாம்

சுல்தான்பேட்டை வேளாண் விரிவாக்க மையம் சார்பில் அப்பநாயக்கன்பட்டி சமுதாயக் கூடத்தில் விதை கிராம பயிற்சித் திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஊராட்சித் தலைவர் சுப்பன் தலைமை வகித்தார். விவசாயிகளே விதைப் பண்ணைகளை அமைத்து, விதைகளை நல்ல விலைக்கு விற்பனை செய்யலாம் என துணை வேளாண்மை அலுவலர் ரங்கராஜன் தெரிவித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) மாணிக்கவாசகம், வேளாண்மை உதவி அலுவலர் குமணன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## வேளாண்மை தொழில்நுட்ப அலுவலர் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம்

தமிழ்நாடு வேளாண்மை தொழில்நுட்ப அலுவலர் சங்கத்தின் திருப்பூர் மாவட்ட பொதுக்குழுக் கூட்டம் பல்லடம் உழவர் சந்தை வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்டத் தலைவர் கருப்புசாமி தலைமை வகித்தார்.

ஒருங்கிணைப்பாளர் வினோத்குமார் வரவேற்றார்.கூட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் பிரகாசம், தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் விஜய், அமைப்புச் செயலாளர் மனோகரன், மாவட்டச் செயலாளர் சவுந்தர்ராஜன், மாவட்டத் தணிக்கையாளர் நடராஜன் உள்பட பலர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் தமிழக விவசாயத்தில் 90 சதவீதம் சிறு, குறு விவசாயிகளாக உள்ளதால், மண்மாதிரி ஆய்வுகளை கட்டணமில்லாமல் விவசாயிகளுக்கு வழங்க வழிவகை செய்ய வேண்டும் என வலியுறுத்தி, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## மின்மாற்றி பழுதால் கருகிய நெல் பயிர்கள் ! விவசாயிகள் சாலை மறியல்

அரூர் அருகே மின்மாற்றி (டிரான்ஸ்பார்மர்) பழுதால் கருகிய நெல் பயிர்களுடன் விவசாயிகள் திங்கள்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

அரூர் வட்டம், பொன்னேரி ஊராட்சிக்கு உள்பட்டது முத்தானூர் கிராமம். இந்த ஊரில் 1500-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசிக்கின்றனர். இந்தக் கிராமப் பகுதியில் மின்சாரம் வழங்கும் மின்மாற்றி கடந்த 28 தினங்களுக்கு முன் பழுதானதாம்.

இதனால், ஆத்திரமடைந்த விவசாயிகள் காய்ந்து போன நெல் பயிர்கள், பழுதான மின் மோட்டார்கள், காலிக் குடங்களுடன் அரூர்-தீர்த்தமலை சாலையில் திடீர் மறியலில் ஈடுபட்டனர்.

சாலை மறியல் போராட்டம் குறித்து முத்தானூரைச் சேர்ந்த விவசாயி கே.வேடியப்பன் கூறியது:

பழுதடைந்த மின்மாற்றியை சீரமைக்கக் கோரி முத்தானூர் கிராம மக்கள் சார்பில், மாவட்ட

ஆட்சியர், மின்சார வாரிய தருமபுரி அலுவலகம், அரூர் செயற்பொறியாளர் உள்ளிட்டோரிடம் கோரிக்கை மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை.

மின்சாரம் இல்லாத நிலையில், நடவு செய்வதற்காக வைத்திருந்த நெல் பயிர்கள் முற்றிலும் காய்ந்து விட்டது. ஒரு மாத காலமாகக் குடிப்பதற்குகூட குடிநீர் இல்லை. இரவு நேரங்களில் மாணவர்கள் படிக்கக் கூட முடியாத நிலையுள்ளது. முத்தானூர் கிராமப் பகுதியில் வசிக்கும் ஆயிரக்கணக்கான விவசாய குடும்பங்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

சாலை மறியல் போராட்டம் குறித்து தகவல் அறிந்த காவல் ஆய்வாளர் பி.தங்கராஜ், மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர் (கிராமம்) கண்ணன் மற்றும் வருவாய்த் துறையினர் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பழுதான மின்மாற்றியை சீரமைப்பு செய்து மின்சாரம் கிடைக்க விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு அதிகாரிகள் உறுதியளித்தனர். இதையடுத்து, சாலை மறியல் கைவிடப்பட்டது. சாலை மறியல் காரணமாக அரூர் - தீர்த்தமலை சாலையில் 2 மணி நேரம் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.80, சென்னையில் ரூ. 2.80.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்

முதல் விலை கிலோ ரூ.57, முட்டைக் கோழி கிலோ ரூ.36.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து திங்கள்கிழமை அதிகரித்தது.

காவிரி பிரச்னையில் தமிழக அரசு தொடர்ந்த வழக்கில், உச்சி நீதிமன்ற உத்தரவுப்படி தமிழகத்திற்கு கிருஷ்ணராஜசாகர் அணையிலிருந்து கர்நாடகம் தண்ணீர் திறந்துவிட்டுள்ளது. இந்தத் தண்ணீர் ஞாயிற்றுக்கிழமை மேட்டூ0ர் அணைக்கு வந்து சேர்ந்தது. இதனால், மேட்டூர் அணைக்கு ஞாயிற்றுக்கிழமை காலை வினாடிக்கு 3,600 கன அடியாக வந்து கொண்டிருந்த நீர்வரத்து திங்கள்கிழமை காலை 10,162 கன அடியாக உயர்ந்தது.

நீர்வரத்தும், திறப்பும் சமமாக இருப்பதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் சரிவிலிருந்து மீண்டுள்ளது. திங்கள்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 47.86 அடியாக இருந்தது.

பாசனத்திற்கு வினாடிக்கு 10,000 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நீர் இருப்பு 16.49 டி.எம்.சியாக இருந்தது.

## டிச. 15-க்குள் நெற்பயிர்களை காப்பீடு செய்ய அழைப்பு

திருச்சி மாவட்டத்தில் சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இம்மாதம் 15-ம் தேதிக்குள் பயிர் காப்பீடு செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருச்சி மாவட்டத்தில் காவிரி பாசனப் பகுதிகளில் சம்பா மற்றும் தாளடி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்களது பயிர்களை வறட்சியிலிருந்து பாதுகாக்கவும், மகசூல் இழப்பை ஈடு செய்யவும், தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்டுள்ள திட்டத்தின்படி பயிர்களை தேசிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யலாம்.

ஓர் ஏக்கருக்குரிய பிரிமியத் தொகை (ரூ. 174) முழுவதையும் அரசே செலுத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கடன் பெறாத விவசாயிகள் அனைவரும் இம்மாதம் 15-ம் தேதிக்குள் பயிர்க் காப்பீடு செய்ய சிறப்பு முகாம்கள் 8 டெல்டா வட்டாரங்களில் உள்ள கிராமங்களில் நடைபெற்று வருகிறது.

இந்த முகாம்களில் விவசாயிகள் அனைவரும் தங்கள் வங்கிக் கணக்கு எண் அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க கணக்கு எண் ஆகிய விவரங்களுடன் விண்ணப்பப் படிவங்களை நிறைவு செய்து தங்கள் கிராமத்தில் நடைபெறும் முகாமில் ஒப்படைக்க வேண்டும்.

பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பங்கேற்பதன் மூலம் ஓர் ஏக்கருக்கு அதிகபட்சமாக காப்பீடு செய்யப்படும் தொகை ரூ. 8,692 மற்றும் தேசிய இடர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 5,000 சேர்த்து மொத்தம் ஏக்கருக்கு ரூ. 13,692 நிவாரணமாக வழங்கப்படும்.

எனவே, டெல்டா பகுதி விவசாயிகள் இது தொடர்பாக கூடுதல் விவரங்களை அறிந்து கொள்ள அந்தந்த வட்டார வேளாண் உதவி இயக்குநர்களை அணுகி அறிந்து கொள்ளலாம்.

## கருகும் சம்பா பயிர்கள் : முதல்வரின் 10 அம்சத் திட்டம் புதுகைக்கும் விரிவுபடுத்தப்படுமா ?

தமிழகத்தில் சம்பா பயிரைக் காப்பாற்ற தமிழக முதல்வர் அண்மையில் அறிவித்துள்ள சலுகைகள் தங்களுக்கும் கிடைக்க வேண்டுமென புதுக்கோட்டை மாவட்ட காவிரி பாசன விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

சம்பா பயிரைக் காப்பாற்ற ரூ.69.88 கோடியில் 10 அம்சத் திட்டத்தை தமிழக முதல்வர் ஜெயலலிதா அண்மையில் அறிவித்தார்.

அதன்படி காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள மின்பம்பு மோட்டார்களுக்கு கடந்த மாதம் 29-ம் தேதியிலிருந்து பகலில் 6 மணி நேரமும், இரவில் 6 மணி நேரம் என நாளொன்றுக்கு 12 மணி

நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வரும் நிலையை அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரை வழங்கப்படும், மேலும், இப்பகுதிகளில் உள்ள சுமார் 32 ஆயிரம் டீசல் பம்புகளைப் பயன்படுத்தும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் ஒரு ஏக்கருக்கு ரூ.600 மானியம் அளிப்பது,பயிர் காப்பீடு,போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டத்திலும் காவிரி-கல்லணை கால்வாய் மூலம் நீர்ப்பாசனம் பெறக்கூடிய சுமார் 12,500 ஹெக்டேர் (31 ஆயிரம் ஏக்கர்) பரப்பளவு உள்ளது. அதில், ஆலங்குடி, அறந்தாங்கி தொகுதிகளைச் சார்ந்த நெடுவாசல், செரியலூர், நெய்வத்தளி, மேற்பனைக்காடு, அரசர்குளம், நாகுடி, சுப்பிரமணியபுரம், கோவிலூர், கறம்பக்குடி ஒன்றியம் உள்ளிட்ட பகுதிகள் அடங்கும். இப்பகுதிகளில் சுமார் 500 மின் மோட்டார் பம்புகள் உள்ளன. வழக்கம் போல இந்த ஆண்டும் காவிரி நீரை நம்பி சம்பா நெல் சாகுபடிப் பணிகளை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். தண்ணீர் வராததால் கடுமையான வறட்சி நிலவுகிறது. சம்பா பயிர்கள் கருகிவருகின்றன.

காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சை, திருவாரூர், நாகை போன்ற மாவட்டங்களுக்கு அரசு அறிவிக்கும் எந்த வித சலுகைகளும் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த காவிரி பாசன விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை.

சம்பா பயிரைக் காப்பாற்ற தமிழக முதல்வர் அண்மையில் அறிவித்துள்ள பலகோடி மதிப்பிலான சலுகைகள்,புதுகை மாவட்டத்திலுள்ள காவிரி-கல்லணை கடைமடைப்பகுதிகளுக்கும் அளிக்க வேண்டும் என ஆயிரக்கணக்கான விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

இது குறித்து புதுக்கோட்டை மாவட்ட கல்லணைக் கால்வாய் விவசாயிகள், பாசனதாரர் கூட்டமைப்பு சங்கத்தலைவர் அத்தாணி ராமசாமி கூறியது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் காவிரி நீர் பாய்கிறதா என கேள்வி கேட்கும் அதிகாரிகளும் உள்ளனர். டெல்டா மாவட்டங்களுக்கு தமிழக முதல்வர் தற்போது அறிவித்துள்ள ரூ. 69 கோடி சலுகைகளை எங்கள் பகுதிக்கும் வழங்க வேண்டும் என்றார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் மு. மாதவன் கூறியது: புதுக்கோட்டை மாவட்டத்தை டெல்டா மாவட்டமாக அரசு அங்கீகரிக்காததே இந்த அவல நிலைக்கு முக்கிய காரணம். எனவே புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் தமிழக முதல்வரின் கவனத்துக்கு இப்பிரச்னையைக் கொண்டு சென்று உடனடியாக அங்கீகரிக்கச் செய்ய வேண்டும். அப்போதுதான் விவசாயிகளின் நெடு நாள் கோரிக்கைக்கு தீர்வு கிடைக்கும் என்றார்.

## வானிலை பயிர்க் காப்பீடு : டிச. 14 கடைசி நாள்

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் வானிலை பயிர்க் காப்பீடு செய்ய டிச. 14-ம் தேதி கடைசி நாள் என்றார் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ப. சங்கரலிங்கம்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இந்தத் திட்டம் அக்ரிகல்சர் இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனம் மற்றும் யூனைடெட் இந்தியா இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மூலம் தமிழகத்தில் பெரம்பலூர் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் ராபி பருவத்தில் கோடை நெல், மக்காசோளப் பயிருக்கு அதிகரிக்கும் வெப்பத்தின் அளவு, நோய் வருவதற்கான சாதகமான கால நிலையைக் கணக்கில் கொண்டு, ஏக்கருக்கு காப்பீட்டுத் தொகையான ரூ. 10 ஆயிரத்திற்கு பிரிமியமாக ரூ. 200 செலுத்த வேண்டும்.

மக்காச்சோளத்திற்கு அதிகப்படியான மழை, காற்றின் வேகம் மற்றும் தொடர்ச்சியான வறட்சி நாள்களை கணக்கில் கொண்டு இழப்பீட்டு தொகை வழங்கப்படுகிறது.

இதேபோல நிலக்கடலை ரபி பயிருக்கு ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரத்திற்கு பிரிமியம் ரூ. 200, ரபி பருவ வெங்காயத்திற்கு ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரத்திற்கு பிரிமியமாக ரூ. 900, தாங்கள் கணக்கு வைத்துள்ள வங்கியின் மூலமோ அல்லது பெரம்பலூர் பள்ளிவாசல் தெருவில் அமைந்துள்ள யூனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திடம் காசோலையாக டிச. 14-ம் தேதிக்குள்ளோ செலுத்திப் பயனடையலாம்.

முன்மொழிவுப் படிவத்திற்கு, தங்களது வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம்.

மேலும் விவரங்களுக்கு பெரம்பலூர்,பள்ளிவாசல் தெருவிலுள்ள யூனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிட், கிளை மேலாளர் பி. ஸ்டாலினை (9600779291, 04328-276926) என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

தினமலர்
11.12.2012 P.M
12.12.2012 A.M

## துவரையை தாக்கும் பச்சை காய்புழு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், துவரையில், "ஹீலியோதீஸ்' எனப்படும் பச்சைக்காய்புழுவின் தாக்குதல் அதிகரித்துள்ளதால், மகசூல் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நடப்பு ஆண்டு, 45 ஆயிரத்து, 163 ஹெக்டேரில் மானாவாரியாக துவரை, உளுந்து, காராமணி, பச்சைப்பயிறு மற்றும் கொள்ளு ஆகிய பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
சென்ற ஆண்டை காட்டிலும் இந்தாண்டு, ஏழு ஆயிரத்து, 363 ஹெக்டேரில் கூடுதலாக பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
துவரையில் எஸ்.ஏ.,1 என்ற உள்ளூர் ரகமும், பி.எஸ்.ஆர்.1., என்ற தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் பவானி சாகர் ஆராய்ச்சி மையத்தில் உருவாக்கப்பட்ட ரகமும், கர்நாடக மாநில பி.ஆர்.ஜி.,1 என்ற ரகமும் அதிக பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
துவரை தற்போது பூக்கும் பருவம் முடிந்து காய்க்க துவங்கியுள்ளது. துவரையில் நான்கு வகையான புழுக்கள் தாக்கி வருகிறது. அதாவது "ஏபிட்ஸ்' மற்றும் இலைப் பேன்கள், "ஹீலியோதீஸ்' எனப்படும் காய்ப்புழுக்கள், "ப்ளுமாத்' மற்றும் புள்ளி காய்ப்புழுக்கள் அதிக அளவில் துவரையை தாக்கி, பொருளாதார சேத நிலையை உருவாக்கியுள்ளது. இதனால் மகசூல் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.
துவரையை தாக்கி வரும் புழுக்களை கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண் இணை இயக்குனர் குணசேகரன் கூறியது:
பொதுவாக துவரையில் பூக்கும் பருவம் நவம்பர் மற்றும் டிசம்பர் முதல் வாரத்தில் முடிவடைந்து டிசம்பரில் காய்கள் காய்க்க துவங்கும். காய்களை துளையிட்டு, "ஹீலியோதீஸ்', "ஆர்மிஜிரா' என்னும் புழுக்கள் சாப்பிடுவதால் விளைச்சல் பாதிப்படையும்.
"ஹீலியோதீஸ்' புழு கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு ஐந்து இனகவர்ச்சி பொறி செட்டாவுடன் வைத்து ஆண் தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். இதனால் புழுக்கள் இன விருத்தி அடையாது கட்டுப்பாட்டில் வைத்து கொள்ள முடியும்.
"பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ்', 400 கிராம் முதல் ஆயிரம் கிராம், "நிம்பிசிடின்' 0.3 சதம், 200 மில்லி டைகுளோர்வாஸ், இன்டாக்சோகார்பு ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு மில்லி, புளுபென்டிமைட் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.4 மில்லி இவற்றில் ஏதாவது ஒரு மருந்தினை தெளிப்பானுக்கு ஏற்றவாறு தண்ணீரில் கரைத்து துவரை செடியில் தெளித்து சேதம் உண்டாக்கும் புழுக்களை

கட்டுப்படுத்தலாம்.
துவரையில் பூசேரியம் ஆக்ஸிஸ்போரம் எனும் நுண் கிருமிகளால் வாடல் நேய் வரவும் வாய்ப்புள்ளதால், பூச்சி கொல்லி மருந்துடன் கார்பண்டசீம் ஒரு லிட்டருக்கு ஒரு கிராம் என்ற அளவில் பூஞ்சான கொல்லி மருந்தை கலந்து தெளிக்க வேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார்.

## "பாம்ரோஸ் ' சாகுபடியில் வருவாய் : விவசாயிகள் மகிழ்ச்சி

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், பாம்ரோஸ் புல் மூலம் அதிக வருவாய் கிடைப்பதால், மானாவரி நிலங்களில் பாம்ரோஸ் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.
விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், மானாவாரி நிலங்கள் அதிகம் உள்ளது. வானம் பார்த்த பூமியில் கடந்த சில ஆண்டாய் பருவமழை ஏமாற்றத்தின் காரணமாக விவசாயிகள் நீர் மோலண்மைக்கு ஏற்ற விவசாய பயிர்களை தேர்வு செய்து சாகுபடி செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.
வாசனை பொருட்கள் தயாரிக்க பயன்படும் பாம் ரோஸ் தேவை அதிகம் இருப்பதோடு, இதை உற்பத்தி செய்யும் பார்ம்ரோஸ் புல்கள் குறைந்த நீர் தேவையில் வளரும் தன்மை கொண்டது என்பதால், தர்மபுரி மாவட்டத்தில் கடந்த ஐந்தாண்டாக மானாவாரி நிலங்களில் பாம் ரோஸ் சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.
தர்மபுரி, நல்லம்பள்ளி ஒன்றியம் உள்ளிட்ட மாவட்டம் முழுவதும், 810 ஹெக்டேர் விவசாயிகள் பாம்ரோஸ் புல் சாகுபடி செய்துள்ளனர். மாவட்டத்தின் பல பகுதிகளில் சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக பார்ம்ரோஸ் புல் நன்கு வளர்ந்தது.
பாம் ரோஸ் புல் அறுவடை பணி மாவட்டத்தின் பல பகுதிகளில் தற்போது துவங்கியுள்ளது. இது குறித்து குறித்து எஸ்.கொட்டவூரை சேர்ந்த விவசாயி மணி கூறியதாவது:.
எங்கள் பகுதியில் அதிகளவில் குறைந்தளவு தண்ணீர் வசதி உள்ளதால் மானாவாரியாக பருத்தி, கொண்டைகடலை, கிழங்கு உள்ளிட்டவை சாகுபடி செய்து வந்தோம். இவற்றை சாகுபடி செய்யும் செலவு ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வந்தது. ஆனால் வருமானம் குறைந்தளவு மட்டும் கிடைத்தது.
இதனால், குறைந்த நடவு செலவு மற்றும் முற்றிலும் பாராமரிப்பு செலவு இல்லாத மானாவாரி பயிரான பாம் ரோஸை புல்லை கடந்த, எட்டு ஆண்டுகளாக சாகுபடி செய்து வருகிறேன்.
ஒரு ஏக்கருக்கு சராசரி ஆறு டன் வரை சாகுபடி கிடைக்கிறது. அன்னசாகரம் உள்ளிட்ட பகுதியில் உள்ள ஆலைகளில், ஒரு டன் புல்லில் இருந்து ஆயில் எடுக்க, 500 ரூபாய் செலவாகிறது. ஒரு டன் புல்லில் இருந்து, ஐந்து லிட்டர் ஆயில் எடுக்கப்படுகிறது.
ஏக்கருக்கு, சரசரியாக, 30 லிட்டர் ஆயில் கிடைக்கிறது. ஒரு லிட்டர் ஆயில், இரண்டு ஆயிரத்து, 250 முதல் இரண்டு ஆயிரத்து, 500 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆண்டுக்கு

இருமுறை அறுவடை செய்யப்படுவதால் செலவுகள் போக ஆண்டுக்கு, 80 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைக்கிறது.
இவ்வாறு கூறினார்.

## இயற்கையோடு இணைந்து வாழ ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தல் அவசியம்

கோவை:""இயற்கை ஆற்றல்களில் பல்வேறு சக்திகள் உள்ளன. இதனை ஆராய்ச்சிகளின் மூலமே வெளிகொண்டுவர முடியும்.இயற்கைக்கு மாறாக நமது வாழ்கை முறையை மாற்றி இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான ஆராய்ச்சிகளில் ஈடுபடவேண்டும்," என உயர்கல்வித்துறை அமைச்சர் பழனியப்பன் பேசினார்.கோவை பாரதியார் பல்கலையில், பாரதியாரின் 130வது பிறந்த நாள் மற்றும் மரபுசாரா எரிசக்தி விழிப்புணர்வு விழா நேற்று நடந்தது.வேளாண்மைத்துறை அமைச்சர் தாமோதரன் தலைமை வகித்தார். கோவை மேயர் வேலுச்சாமி முன்னிலை வகித்தார்.
உயர்கல்வித்துறை அமைச்சர் பழனியப்பன் பேசியதாவது:தமிழகத்தின் மின்சாரத் தேவை 12, 500 மெகாவாட் , இருப்பு 8,500 மெகாவாட் உள்ளது. 4,000 மெகாவாட் பற்றாக்குறையாக உள்ளது. இந்த பற்றாக்குறையை சரிபடுத்த இயற்கையை மாற்று சக்தியாக பயன்படுத்த வேண்டும். இயற்கைக்கு எவ்வித அழிவும் இன்றி , இயற்கைக்கு மாறாக நமது வாழ்கை முறையை மாற்றி இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான ஆராய்ச்சிகளில் ஈடுபடவேண்டும். இயற்கை ஆற்றல்களில் பல்வேறு சக்திகள் உள்ளன. இதனை ஆராய்ச்சிகளின் மூலமே வெளிகொண்டு வர முடியும்.
தமிழகத்தில் உள்ள கல்வி நிறுவனங்கள், தொழில்துறை, வருகின்ற 2015க்குள் சூரிய ஆற்றல் மூலம் 6 சதவீத மின்சாரத்தை சேகரித்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் உயர்கல்வியில் மாணவர்கள் சேர்க்கை வளர்ந்த நாடுகளில், 54 சதவீதமாகவும், சர்வதேச அளவில், 23 சதவீதமாகவும் உள்ளது. தமிழகத்தில் தற்போது 13 சதவீதமாக (ஆண்கள்-12.44%, பெண்கள்-9.22%) உள்ளது. 2025க்குள் இதனை 25 சதவீதத்திற்கு உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார். பாரதியார் பல்கலை துணைவேந்தர் ஜேம்ஸ்பிச்சை, வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## நேரடி நெல்விதைப்பு நிலங்களில் கால்நடைகளை மேய்க்கும் பரிதாபம்

பரங்கிப்பேட்டை: பாசன வாய்க்காலில் தண்ணீர் வராததால் நேரடி நெல் விதைப்பு செய்த நிலங்களில் கால்நடைகளை மேய்க்கும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. காவிரியில் தண்ணீர் இல்லாததாலும், பருவமழை பொய்த்தாலும் இந்தாண்டு சம்பா சாகுபடி நடக்க வில்லை. இதனால் பரங்கிப்பேட்டை ஒன்றியம் அருண்மொழித்தேவன், தச்சக்காடு, சேந்திரக்கிள்ளை, வேளங்கிப்பேட்டை, அரியகோஷ்டி, அகரம் உட்பட 100க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டனர். "நீலம்' புயலின் போது வீராணம் ஏரிக்கு

தண்ணீர் வரத்து அதிகமாக இருந்ததால் ஒன்றியத்தில் உள்ள அரியகோஷ்டி வாய்க்கால், மானம்பாத்தான் வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்பட்டது.இதனால் விவசாயிகள் பல கிராமங்களில் நேரடி நெல் விதைப்பு செய்த நெற்பயிர்களில் களையெடுத்து உரம் போட்டதால் நெற்பயிர்கள் நன்கு வளர்ந்தன.

தற்போது கர்நாடகாவில் இருந்து காவிரிக்கு தண்ணீர் திறக்காமல் வீராணம் ஏரியில் தண்ணீர் பற்றாக் குறை ஏற்பட்டது. பாசன வாய்க்கால்களில் ஒரு மாதத்திற்கு மேலாக தண்ணீர் திறக்கவில்லை. இதனால் பல கிராமங்களில் நெற்பயிர்கள் கருகின. இந்நிலையில் அரியகோஷ்டி வாய்க்கால் கடைமடை பகுதியான அரியகோஷ்டி, அகரம் கிராமங்களில் சுமார் 300 ஏக்கரில் நேரடி நெல்விதைப்பு செய்த நிலங்களில் ஆடு, மாடுகளை மேய்த்து வருகின்றனர். மேலும் நடவுக்காக விடப்பட்ட நாற்று களிலும் மேய்த்து வருகின்றனர். இந்தாண்டு நேரடி நெல் விதைப்பு செய்ய அரசு ஊக்கப்படுத்தியதால் அதிகளவில் விவசாயிகள் வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெற்றும், வட்டிக்கு கடன் பெற்றும், நகையை அடமானம் வைத்தும் பயிர் செய்தனர். இருந்தும் பாசன வாய்க்காலில் தண்ணீர் வராததால் நேரடி நெல் விதைப்பு செய்த நெற்பயிர்களில் கால்நடைகளைவிட்டு மேய்த்து வருகின்றனர். பாதித்த விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும். கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகள் பெற்ற கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தள்ளுபடியான தவிடு விலைசறுக்குமா சமையல் எண்ணைய்

காரைக்குடி:கர்நாடகா "தவிடு' வரத்தால், தமிழக அரவை மில்லில் தவிட்டின் விலை, ஒரு டன்னுக்கு நான்காயிரம் ரூபாய் வரை குறைந்துள்ளது.சமையல் எண்ணைய்,தவிட்டிலிருந்து தயாரிக்கப்படுகிறது. மாடர்ன் ரைஸ் மில்களில் 60 கிலோ நெல்லில், நான்கு கிலோ தவிடும், உமியை சேர்த்து அரைக்கும் சாதாரண மில்லில், எட்டு கிலோவும் கிடைக்கிறது. கோழி, மாட்டு தீவனத்துக்கு பயன்படுத்துவதை விட, அதிக அளவில் சமையல் எண்ணைய் தயாரிப்புக்கு இவை பயன்படுகிறது. தமிழகத்தில், கடந்த வாரம் ஒரு டன் 22 ஆயிரம் ரூபாயாக இருந்தது. தற்போது கர்நாடகா தவிடு வரத்து அதிகரிப்பால், 18ஆயிரமாக ரூபாயாக குறைந்துள்ளது.அரிசி ஆலை உரிமையாளர் ஒருவர் கூறியதாவது: கர்நாடகாவில் ஒரு கிலோ தவிட்டை 13 ரூபாய்க்கு வாங்கி, இங்கு 15 ரூபாய்க்கு விற்கின்றனர். தமிழக மில்களில் உள்ள தவிடு கடந்த வாரம் கிலோ ரூ.22க்கு விற்றது 18 ரூபாயாக குறைந்துள்ளது. இதனால்,சமையல் எண்ணெய் விலை குறையும் வாய்ப்பு உள்ளது,என்றார்.

## பால் பண்ணையில் லாபமில்லை :இறைச் சிக்காக மாடுகள் விற்பனை

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில், பால் பண்ணை தொழிலில் லாபமில்லாததால், இறைச்சிக்காக மாடுகள் அதிகளவில் விற்கப்படுகின்றன. ராமநாதபுரம் மாவட்டத்தில் 2007ம் ஆண்டில், ஒரு லட்சத்து 32 ஆயிரம் மாடுகள் இருந்தன. நடப்பாண்டு கணக்கெடுப்பில் இவற்றின்

எண்ணிக்கை 65 லட்சமாக குறைந்துவிட்டது. இதுகுறித்து கால்நடை துறை அதிகாரிகள் கிராமங்களில் "சர்வே' நடத்தி வருகின்றனர். இத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ""மாடு வளர்ப்போருக்கு மானிய விலையில் தீவனங்கள் வழங்கப்பட்டன. பால்பண்ணை தொழிலில் லாபம் கிடைக்காததால், மாடுகளை இறைச்சிக்காக விற்றுவிட்டு, மீன்பிடி கூலி தொழிலுக்கு சென்றது தெரியவந்தது. தற்போது இருக்கும் மாடுகளை காப்பாற்ற, ஆலோசனை வழங்கி வருகிறோம்,'' என்றார்.

## குடிநீர் பயன்பாடு மாணவர்களுக்கு பயிற்சி

திருக்கோவிலூர்: திருக்கோவிலூர் அடுத்த ஜி.அரியூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் குடிநீர் வடிகால்வாரியம் சார்பில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. குடிநீர் வடிகால் வாரியம், க்யூ.எஸ்.எஸ்.ஏ., தொண்டு நிறுவனம் இணைந்து 9 மற்றும் 10ம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு குடிநீர் பாதுகாப்பு, நீரினால் ஏற்படும் நோய்கள், சிக்கனமாக குடிநீரை பராமரிப்பது குறித்த பயிற்சி அளித்தனர். ஒன்றிய சேர்மன் அறிவழகன், பயிற்சியை துவக்கி வைத்தார். தலைமை ஆசிரியர் பூரணியம்மாள் வரவேற்றார். தொண்டு நிறுவன பயிற்றுனர்கள் பாண்டியம்மாள், மோகனம்மாள் பயிற்சி அளித்தனர். உதவி தலைமை ஆசிரியர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

## கள்ளக்குறிச்சியில் இன்று பருத்தி சந்தை துவக்கம்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி வார சந்தை இன்று (12ம் தேதி) துவங்குகிறது. கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஆண்டுதோறும் பருத்தி வார சந்தை நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிற்கான (2012-13) பருத்தி வார சந்தை இன்று (12ம் தேதி) துவங்குகிறது. விலை நிர்ணயத்தில் திருப்தி இல்லையெனில் பஞ்சு மூட்டைகளை குடோனில் வைத்து விட்டு விலை உயரும்போது விற்பனை செய்துகொள்ளும் வசதி உள்ளது. விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, சேலம் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் பலர் பஞ்சு மூட்டைகளை இங்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். திருப்பூர், சத்தியமங்கலம், மகுடசாவடி, கோவில்பட்டி, கும்பகோணம், விழுப்புரம் பகுதி வியாபாரிகள் பஞ்சு மூட்டைகளை கொள்முதல் செய்கின்றனர். ஆண்டுதோறும் கோடி கணக்கான ரூபாய் வர்த்தகம் நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு விற்பனை இலக்கு 10 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 16 கோடி வரை விற்பனையானது குறிப்பிடத்தக்கது. ஏற்பாடுகளை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பாண்டியன் செய்து வருகிறார்.

## கால்நடை மருத்துவ முகாம்

வேலாயுதம்பாளையம்: டி.என்.பி.எல்., காகித ஆலை சார்பில் இலவச கால்நடை மருத்துவ முகாம் பழமாபுரத்தில் நடந்தது.

முகாமில், 57 எருமைகள், 18 பசு மாடுகள், 103 ஆடுகள், 12 காளைகள், ஏழு நாய்கள் மற்றும் 31 கோழிகளுக்கு, இலவச மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு, நோய் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டது. 228 கால்நடைகளுக்கு, 20 ஆயிரம் மதிப்புள்ள ஊட்டச்சத்து மாவுகள் வழங்கப்பட்டன.

டி.என்.பி.எல்., முதன்மை பொதுமேலாளர் (இயக்கம்) மணி, துணை பொது மேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் குழந்தைசாமி, கால்நடை மருத்துவர்கள் தமிழரசன், அனிதா, பார்த்தீபன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## கி.கிரியில் மூலிகை கொள்முதல் மையம் அமைக்க கோரிக்கை

கிருஷ்ணகிரி: டெங்கு காய்ச்சலை தடுக்க அரசு மருத்துவமனைகளில் மூலிகை சாறு இலவசமாக அரசு வழங்கி வரும் நிலையில், "கிருஷ்ணகிரி மாவட்ட வனப்பகுதியில் கிடைக்கும் அரிய வகை மூலிகை தாவரங்களை விற்பனை செய்ய வசதியாக மூலிகை கொள் முதல் மையம் அமைக்க வேண்டும்' என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட மொத்த புவியியல் பரப்பான, 5 லட்சத்து ,14 ஆயிரத்து, 326 ஹெக்டேரில், 2 லட்சத்து, 2 ஆயிரத்து, 409 ஹெக்டேரில் வனங்கள் உள்ளன. வனம் மற்றும் வனம் சார்ந்த மலை மற்றும் கிராம பகுதிகளில் அரிய வகை மூலிகைகள் அதிகம் கிடைக்கிறது.

குறிப்பாக மலை வேப்பு, நில வேம்பு, சிறு குறிச்சான், ஆடுமுட்டான், சித்திரை மூலம், துளசி, வல்லாரை, பொன்னாங்கன்னி உள்ளிட்ட, 75க்கும் மேற்பட்ட மூலிகை தாவரங்கள் அதிகம் உள்ளது.

தற்போது, மாவட்டத்தில் வைரஸ் காய்சல் பரவி வரும் நிலையிலும் கிராம புறத்தில் உள்ளவர்கள் மூலிகை தாவரங்களை கொண்டு வைத்தியம் பார்த்துக்கொள்கின்றனர். இதில், வனப்பகுதியில் சாதாரணமாக கிடைக்கும் வேம்பு, ஆடுதோடா, செம்பருத்தி, காட்டுக்கத்திரி, காசினியா, சோற்றுக்கற்றாழை போன்ற மூலிகை தாவரங்களை வனத்தை ஒட்டியுள்ள பகுதியில் வசிக்கும் கிராம மக்கள் மருத்துவத்துக்கு அதிகம் பயன்படுத்துகின்றனர்.

மருத்துவ குணம் கொண்ட அரிய வகை மூலிகை பயிர்களை கிராம பகுதிகளில் உள்ளவர்களிடம் கிருஷ்ணகிரியை சேர்ந்த வியாபாரிகள் வாங்கி வந்து அதனை வெயிலில் உலர்த்தி விற்பனை செய்கின்றனர்.

இவ்வாறு விற்பனை செய்யப்படும் அரிய வகை மூலிகைகளுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளன. ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து, ஜெர்மன் ஆகிய நாடுகளுக்கு

கிருஷ்ணகிரியில் இருந்து கிடைக்கும் மூலிகை பயிர்கள் அதிக அளவு விற்பனைக்கு செல்கிறது. மூலிகை பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில், கிருஷ்ணகிரியில் மூலிகை கொள்முதல் மையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வாழைகள் அழிந்ததால் மனமுடைந்த விவசாயி விஷம் குடித்து தற்கொலை**

தக்கலை : தக்கலை அருகே வாழைகள் அழிந்ததால் மனமுடைந்த விவசாயி விஷம் குடித்து தற்கொலை செய்துகொண்டார்.

இது குறித்து போலீஸ் தரப்பல் கூறப்படுவதாவது: தக்கலை அருகே வில்லுக்குறி பாறையடி பகுதியைச் சேர்ந்தவர் தாஸ் மகன் வேதமணி(48). இவருக்கு இதுவரை திருமணமாகவில்லை. கடந்த 10 நாட்களுக்கு முன்பு இவரது தோட்டத்திலுள்ள வாழை மரங்கள் காற்றில் அழிந்து விட்டன. அதில் மனம் நொந்து போன வேதமணி குமாரகோவில் அருகே சாலிக்கோணம் பகுதியில் விஷ மருந்து குடித்து விட்டு மயங்கிய நிலையில் காணப்பட்டார். அருகிலிருந்தோர் அவரை ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். ஆயினும் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார்.

சம்பவம் குறித்து அவரது சகோதரர் ஐசக் அளித்த புகாரின் பேரில் தக்கலை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

**பண்ணைப்பட்டியில் யானைகள் விவசாயிகள் அச்சம்**

கன்னிவாடி:கன்னிவாடி அருகே டி.பண்ணைப்பட்டி பகுதியில், ஏராளமான விவசாயிகள் கரும்பு, மக்காச்சோளம் சாகுபடி செய்துள்ளனர். மேற்குத் தொடர்ச்சி மலையடிவார பகுதிகளான கோம்பைக்காடு, முத்துப்பாண்டி கோயில் ரோட்டின் இருபுறமும், தென்னை, மா,வாழை, இலவ மர தோப்புகள் உள்ளன. முத்துப்பாண்டி கோயில் கரட்டைச் சுற்றிலும், அகழி அமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இரு வாரங்களுக்கு முன், இப்பகுதியில் யானைகள் நடமாட்டம் தென்படத் துவங்கியது.கடந்த மூன்று நாட்களாக, இரு குட்டிகள் உள்பட 10க்கும் மேற்பட்ட யானைக்கூட்டம் உலா வரத் துவங்கியுள்ளன.

மாலை 4 மணி முதல், மலையடிவார தோப்புகளில் முகாமிட்டு, மா, தென்னை மரங்களை சேதப்படுத்தி வருகின்றன. நேற்று முன்தினம் இரவு, விவசாய நிலங்களில் புகுந்த யானைகள், மக்காச்சோளம், கரும்புகளை சேதப்படுத்தின. ஆறுமுகம், மாயாண்டி, ராதா, திருமல்சாமி, தண்டபாணி ஆகியோரின் விளைநிலங்களில், சாகுபடி பயிர்களை சேதப்படுத்தின. இதையடுத்து, விவசாயிகள் மாலை 3 மணிக்குமேல், வேளாண்பணிகளை மேற்கொள்ள முடியாதளவிற்கு அச்சம் அடைந்துள்ளனர்.வனத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "யானைகள் நடமாட்டம் குறித்த தகவல் தற்போதுதான் தெரியவந்துள்ளது. இதனை கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்,' என்றார்.

**தண்ணீரின்றி சாகுபடி பாதிப்பு விவசாயி தற்கொலை முயற்சி**

திருத்துறைப்பூண்டி: சாகுபடி பாதித்ததால் மனமுடைந்த விவசாயி, விஷம் குடித்து ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள எழிலூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த நேமம் வடக்கு தெரு விவசாயி நாகூரான் (55). இவர் தனது சாகுபடி பயிர் தண்ணீர் இல்லாமல் கருகி வரும் நிலையை பார்த்து மனமுடைந்து இருந்தார்.

தற்போது வரும் தண்ணீரும் குறைவாக இருப்பதால், வயலுக்கு பாய்ச்ச முடியாத நிலையை எண்ணி மனமுடைந்த நாகூரான், நேற்று காலை விஷம் குடித்தார். ஆபத்தானநிலையில் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து திருத்துறைப்பூண்டி போலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

11.12.2012 P.M

12.12.2012 A.M

## மேட்டூரில் இருந்து நீர்திறப்பு அதிகரிப்பு



மேட்டூர்: கர்நாடக மாநிலம் கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து உச்சநீதிமன்ற உத்தரவின்படி திறக்கப்பட்ட நீர் கடந்த 9ம் தேதி மதியம் மேட்டூர் அணையை வந்தடைந்தது. நேற்று வினாடிக்கு 17,313 கனஅடி தண்ணீர் வந்தது. பாசன பகுதிகளுக்கு திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 11,500 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. நீர்மட்டம் 48.82 அடி. நீர் இருப்பு 17.07 டி.எம்.சி.யாக உள்ளது. இதனிடையே கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து நீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளதால் நீரின் அள வு நேற்று விநாடிக்கு 3,100 கன அடியாக குறைந்தது.

## கொப்பரை வரத்து குறைவால் தேங்காய் எண்ணெய் விலை திடீர் உயர்வு



கொச்சி : கொப்பரை வரத்து குறைந்ததால், கேரளா மற்றும் தமிழகத்தில் தேங்காய் எண்ணெய் விலை கிலோவுக்கு ரூ.6.50 வரை உயர்ந்துள்ளது. இது பற்றி, கொச்சின் எண்ணெய் வியாபாரிகள் சங்கத் துணை தலைவர் பிரகாஷ் ராவ் கூறியதாவது: கேரளா மற்றும் தமிழகத்தில் கொப்பரை வரத்து குறைந்து வருகிறது. இதனால், தேங்காய் எண்ணெய் விலை திடீரென உயர்ந்துள்ளது.

கடந்த வாரம், கேரளாவில் தேங்காய் எண்ணெய் கிலோ ரூ.61.50 ஆக இருந்தது. இது ரூ.67 ஆக அதிகரித்துள்ளது. அதே போல், தமிழகத்தில் கிலோ ரூ.59.50ல் இருந்து ரூ.66 வரை உயர்ந்துள்ளது.

மேலும், கொப்பரை தட்டுப்பாடு காரணமாக அதன் விலையும் உயர்ந்துள்ளது. கேரளாவில் கொப்பரை குவிண்டால் ரூ.4,200ல் இருந்து ரூ.4,800 ஆகவும், தமிழகத்தில் ரூ.3,900ல் இருந்து ரூ.4,700 ஆகவும் அதிகரித்துள்ளது. விலை இன்னும் அதிகரிக்கும் என்ற நம்பிக்கையில் கொப்பரைகளை வியாபாரிகள் மொத்தமாக தேக்கி வைக்கின்றனர். இதனால், தேங்காய் எண்ணெய் விலையும் தற்போதைக்கு குறைய வாய்ப்ப்பில்லை.. மலேசியா, இந்தோனேஷியா நாடுகளில் பாமாயில் உற்பத்தி அதிகரித்துள்ளதால், இந்தியாவுக்கு வரத்து அதிகரித்து அதன் விலை குறைந்து வருகிறது. இவ்வாறு பிரகாஷ் ராவ் தெரிவித்தார்.

**நவம்பர் மாதத்தில் ஏற்றுமதி ரூ.1200 கோடியாக சரிவு**

புதுடெல்லி : அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் தேவை குறைந்ததால் கடந்த மாதத்தில் நாட்டின் ஏற்றுமதி 4.17% சரிவடைந்து ரூ.1200 கோடியாக உள்ளது.
அதே சமயத்தில், கச்சா எண்ணெய் இறக்குமதி அதிகரித்ததால், இறக்குமதி அளவு 6.35 சதவீதம் அதிகரித்து ரூ.2241 கோடியாக உள்ளது. இதனால் வர்த்தக பற்றாக்குறை ரூ.1041 கோடியாக உள்ளது.

நடப்பாண்டில் ஏப்ரல்,அக்டோபர் இடைப்பட்ட மாதங்களில் ஏற்றுமதி 5.95 சதவீதம் சரிவடைந்து ரூ.10,217 கோடியாக உள்ளது. இறக்குமதியும் இந்த காலகட்டத்தில் 1.58 சதவீதம் குறைந்தது. இந்த நிதியாண்டின் முதல் 8 மாதங்களில் வர்த்தக பற்றாக்குறை ரூ.6993 கோடியாக உள்ளது. நவம்பர் மாதத்தில் மட்டும் எண்ணெய் இறக்குமதி 16.7 சதவீதம் அதிகரித்து ரூ.783 கோடியாக உள்ளது.

11th dec 2012 P.M

**பொய்த்தது பருவமழை நாற்றுகளை நடமுடியாமல் கண்ணீர் சிந்தும் விவசாயிகள்**

சாத்தூர், : பருவமழை பொய்த்ததால் சாத்தூர் பகுதியில் விளைவித்த நாற்றுகளை நடவுசெய்ய முடியாமல் விவசாயிகள் கண்ணீர் சிந்துகின்றனர்.

சாத்தூர் பகுதியில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நெல் பயிரிடுவது வழக்கம். இதில் பெரும்பாலான விவசாய நிலங்களில் பருவமழையை நம்பியே விவசாயம் செய்யப்படுகின்றன. இந்த ஆண்டு ஆந்திரா பொன்னி, கல்சல் பொன்னி வகை நெற்பயிரை விளைவிக்க விவசாயிகள் முடிவு செய்தனர். இதற்காக கடந்த 30 தினங்களுக்கு முன்பு நெல்விதைகளை வயல்களில் தூவி நாற்றுகளை வளர்த்தனர். ஆனால் வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் இல்லாததால் தற்போது நாற்று களை நட முடியாமல் கண்ணீர் சிந்துகின்றனர்.

நாற்றுபாகி ஒரு மாதத்திற்கு மேல் கடந்துவிட்டதால் நாற்றுகளை நடமுடியாமல், கால்நடைகளின் தீவனத்திற்கு இடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பருவமழை மேலும் தாமதமானால் மீண்டும் புதிதாக நாற்றுபாகி நடக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட நீர்பாசன சங்க தலைவர் கருப்பையா கூறுகையில், `பருவமழை பெய்யாததால் சாத்தூர் பகுதியில் நீர்பாசன ஆதாரங்களான கோல்வார்பட்டி அணை, வேண்டாங்குளம் கண்மாய், வன்னிமடை கண்மாய் உட்பட அனைத்து கண்மாய்களும் வறண்டு கிடக்கின்றன. மழைபெய்யும் என்ற நம்பிக்கையில் கிலோ ரூ30க்கு நெல்விதைகள் வாங்கி நாற்றுபாகினோம்.

நாற்றுப்பாகி ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. எதிர்பார்த்த மழை இல்லாததால், நாற்றுகள் அனைத்தும் வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளது. அடுத்த சில நாட்களில் மழை பெய்யாவிட்டால் நாற்றுகளை கால்நடைகளுக்கு தீவனமாக்க முடிவு செய்துள்ளோம். நீர்பிடிப்பு கண்மாய்களை அதிகாரிகள் சரிவர பராமரிக்காததால், சமீபத்தில் பெய்த மழைநீரை கூட சேமிக்க முடியவில்லை. நீர்வரத்து கால்வாய்கள் தூர்வாரப்படாமல் கண்மாய்களுக்கு தண்ணீர் வந்து சேர வில்லை. விவசாயிகளின் வேதனையை அரசும் புரிந்துகொள்ளவில்லை. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண் டும். சாத்தூரை வறட்சி பகுதியாக அறிவிக்க வேண் டும் என்றார்.

**மகசூல் குறைந்தது வெங்காயம் , இஞ்சி கிலோ ரூ.60 ஆக உயர்வு**

நெல்லை, : நெல்லை மாவட்டம் பாவூர்சத்திரம், ஆலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பகுதிகளில் வெங்காயம் பயிரிடப்படுவது வழக் கம்.

தற்போது இப்பகுதிகளில் மகசூல் இல்லாததால் ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் போன்ற இடங்களில் இருந்து லாரிகள் மூலம் வெங்காயம் நெல்லைக்கு கொண்டு வரப்படுகிறது. ஆனாலும் தென் மாவட்டங்களுக்கு சப்ளை செய்யும் அளவுக்கு மகசூல் இல்லாததால் விலை உயர்ந்து வருகிறது. ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் கிலோ ரூ.25வரை விற்பனையான

வெங்காயம் தற்போது படிப்படியாக உயர்ந்து ரூ.58 முதல் ரூ.60 வரை விற்பனை செய்யப்படுகிறது. விளாத்திகுளம் பகுதியில் வெங்காயம் மகசூல் கிடைக்கும் வரை விலை குறைய வாய்ப்பில்லை என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேபோல் நெல்லை மாவட்டம் புளியரை, வல்லம், இலஞ்சி பகுதிகளில் இஞ்சி பயிரிடப்படுகிறது.

தற்போது இப்பகுதிகளில் மகசூல் குறைந்து விட்டதால் கம்பம், தேனி பகுதிகளில் இருந்து இஞ்சி விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இதனால் இஞ்சி விலை உயர்ந்து கிலோ ரூ.60லிருந்து ரூ.65 வரை விற்பனை செய்யப்படுகிறது.